# மரபுசாரா எரிசக்தி உற்பத்தி 50% அதிகரிப்பு

## பாரத் மின்சார உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி பெருமிதம்

**புதுடெல்லி**

நாட்டின் மரபுசாரா எரிசக்தி உற்பத்தி 50 சதவீதம் அதிகரித்திருக்கிறது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

டெல்லி துவாரகா பகுதியில், "பாரத் மின்சார உச்சி மாநாடு" நேற்று தொடங்கியது. இந்த மாநாடு வரும் 22-ம் தேதி வரை 4 நாட்கள் நடைபெற உள்ளது. இதில் உள்நாடு மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த 25,000-க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்று உள்ளனர். மாநாட்டை ஒட்டி சிறப்பு கண்காட்சி நடைபெறுகிறது. 500-க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டு உள்ளன.

மாநாட்டின் முதல் நாளில் பிரதமர் நரேந்திர மோடியின் உரையை மத்திய எரிசக்தித் துறை செயலாளர் பங்கஜ் அகர்வால் வாசித்தார். அதில் பிரதமர் மோடி கூறியிருப்பதாவது:

**500 ஜிகாவாட் இலக்கு..**

வரும் 2047-ம் ஆண்டில் வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயித்து உள்ளோம். இதற்கேற்ப நாட்டின் எரிசக்தி உள்கட்டமைப்பு தொடர்ந்து வலுப்படுத்தப்பட்டு வருகிறது. மரபுசாரா எரிசக்தி உற்பத்தி 50 சதவீதம் அதிகரித்திருக்கிறது. வரும் 2030-ம் ஆண்டுக்குள் மரபுசாரா எரிசக்தி உற்பத்தியை 500 ஜிகாவாட்டாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

ஒரே சூரியன் - ஒரே உலகம், பிஎம் சூரிய கர் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அணு சக்தி மின்சார உற்பத்தியை அதிகரிக்க சாந்தி சட்டம் இயற்றப்பட்டு உள்ளது. இந்த நேரத்தில் சர்வதேச முதலீட்டாளர்கள் இந்திய எரிசக்தி துறையில் அதிக அளவில் முதலீடு செய்ய அழைப்பு விடுக்கிறேன்.

இவ்வாறு பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

மத்திய மின்சாரத் துறை அமைச்சர் மனோகர் லால் கட்டார் பேசும்போது, "மின்சாரம் என்பது எரிசக்தி மட்டும் கிடையாது. நாட்டின் வளர்ச்சிக்கான ஏணி ஆகும். உலக நாடுகளை ஒப்பிடும்போது இந்தியாவில் மின் கட்டணம் மிகவும் குறைவாக உள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் புதிதாக 2.09 லட்சம் கி.மீ. தொலைவுக்கு புதிதாக மின் தடங்கள் அமைக்கப்பட்டு உள்ளன" என்று தெரிவித்தார்.

மாநாடு தொடர்பாக மத்திய மின்சாரத் துறை வட்டாரங்கள் கூறியதாவது:

நாடு முழுவதும் நிலக்கரியை அடிப்படையாக கொண்ட அனல் மின் நிலையங்கள் மூலம் 43.77 சதவீத மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. சூரிய சக்தி, காற்றாலை, நீர் மின் நிலையங்கள், அணு மின் நிலையங்கள் மூலம் 50.56 சதவீத மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இதன்படி மரபுசாரா எரிசக்தி உற்பத்தி 50 சதவீதத்தைத் தாண்டி உள்ளது.

டெல்லி மாநாட்டின் மூலம் இந்திய எரிசக்தி துறையில் ரூ.50 லட்சம் கோடி முதலீட்டை ஈர்க்க திட்டமிடப்பட்டு உள்ளது. குறிப்பாக இந்தியாவின் சூரிய மின் உற்பத்தி, காற்றாலை, நீர் மின் திட்டங்களில் அதிக அளவில் முதலீடுகளை ஈர்க்க முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. இவ்வாறு மத்திய மின்சார துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

### ரஷ்ய வர்த்தகக் கூட்டாளி நிறுவனங்கள்

# இந்திய ரூபாயை பயன்படுத்துவது எப்படி?

## வழிமுறைகளை ஆராய்கிறது ரிசர்வ் வங்கி

**மும்பை**

ரஷ்ய வர்த்தகக் கூட்டாளி நிறுவனங்கள் தங்களிடம் உபரியாக உள்ள இந்திய ரூபாயை எப்படி பயன்படுத்துவது என்பது தொடர்பான வழிமுறைகளை இந்திய ரிசர்வ் வங்கி ஆராய்ந்து வருகிறது.

உலக நாடுகள் சர்வதேச வர்த்தகத்துக்காக அமெரிக்க டாலரை பயன்படுத்துகின்றன. இந்நிலையில், அமெரிக்க டாலர் மீதான சார்பைக் குறைப்பதற்கு சில நாடுகள் முயற்சி செய்து வருகின்றன. அந்த வகையில், கடந்த சில ஆண்டுகளாக, இந்தியாவும் ரஷ்யாவும் இருதரப்பு வர்த்தகத்துக்கு தங்கள் சொந்த நாட்டு நாணயங்களை (ரூபாய் மற்றும் ரூபிள்) பயன்படுத்தி வருகின்றன.

அதேநேரம், ரஷ்யாவுக்கான ஏற்றுமதி மதிப்பைவிட கூடுதலான மதிப்புக்கு இந்தியா இறக்குமதி செய்கிறது. இதனால் ரஷ்ய வர்த்தக நிறுவனங்களிடம் இந்திய ரூபாய் அதிக அளவில் குவிந்து வருகிறது. இதை வேறு நாடுகளுடனான வர்த்தகத்துக்கு பயன்படுத்த முடியவில்லை. இதையடுத்து, ரஷ்ய வர்த்தகர்கள், வங்கிகளிடம் உள்ள உபரி ரூபாய் இருப்புகளை இந்திய அரசுப் பத்திரங்களில் முதலீடு செய்ய ரிசர்வ் வங்கி கடந்த ஆண்டு அனுமதித்தது. ஆனாலும், ரஷ்ய வர்த்தக நிறுவனங்களிடம் இந்திய ரூபாய் அதிக அளவில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், மும்பையில் நடைபெற்ற ரஷ்யா-இந்தியா மன்ற கூட்டத்தில் பங்கேற்ற ரிசர்வ் வங்கியின் அந்நியச்செலாவணித் துறையின் தலைமைப் பொது மேலாளர் என்.செந்தில் குமார் பேசியதாவது:

ரஷ்யக் கூட்டாளி நிறுவனங்களால் திரட்டப்பட்ட இந்திய ரூபாயை, அவர்களின் இறக்குமதிக்கான பணத்தை செலுத்துவதற்கோ அல்லது இந்தியாவில் மூலதன முதலீடுகளைச் செய்வதற்கோ பயன்படுத்துவதற்கான பல்வேறு வழிமுறைகளை வழங்குவது பற்றி ரிசர்வ் வங்கி ஆராய்ந்து வருகிறது.

ஏற்றுமதியாளர்கள் அல்லது இறக்குமதியாளர்கள் உள்ளூர் நாணயங்களைப் பயன்படுத்துவதற்கு ஒருவித நம்பிக்கை வர வேண்டும், இது இந்திய ரூபாயில் நடக்கும் பரிவர்த்தனைகளின் அளவை அதிகரிக்க உதவும்.

பரிவர்த்தனைகளைச் செய்யாதவரை, சந்தை உருவாக முடியாது. எனவே, நாம் தொடர்ந்து பரிவர்த்தனைகளைச் செய்யும்போது, ரூபாய்-ரூபிள் பரிவர்த்தனைகளைச் செய்வதில் அதிக ஆர்வம் இருப்பதை நாம் காணும்போது, சந்தை உருவாவதை நாம் காண்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# மேற்காசிய நிலவரம்: ஏற்றுமதியாளர்களுக்கு உதவ ரூ. 497 கோடி நிவாரண திட்டம்

## மத்திய அரசு அறிமுகம்

புது தில்லி, மார்ச் 19: மேற்காசிய போர் காரணமாக கப்பல் போக்குவரத்து மற்றும் சரக்குகள் விநியோகம் தடைபட்டுள்ளதால், கடும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள ஏற்றுமதியாளர்களுக்கான உதவ ரூ. 497 கோடி ஒதுக்கீட்டுடன் 'ரிலீஃப் (ஏற்றுமதி சவால்களைக் களைய மீள்திறன் மற்றும் தளவாட உதவி)' என்ற திட்டத்தை மத்திய அரசு வியாழக்கிழமை அறிமுகம் செய்தது.

ஏற்றுமதி கடன் உத்தரவாத நிறுவனம் (இசிஜிசி) இந்த நிவாரண திட்டத்தைச் செயல்படுத்த உள்ளது.

இத் திட்டத்தின் கீழ், ஏற்கெனவே பதிவு செய்து காலவதியாகும் சரக்குகளின் ஏற்றுமதிக்கான முன்கூட்டிய அனுமதி எந்தவித அபராதமும் இன்றி தானாக நீட்டிப்பு செய்வது, ஏற்கெனவே காப்பீடு செய்து தேங்கி நிற்கும் சரக்குகளுக்கு பாதுகாப்பு அளிப்பது உள்ளிட்ட நிவாரணங்கள் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

இதுகுறித்து தில்லியில் வியாழக்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பில் மத்திய வர்த்தக அமைச்சகத்தின் செயலர் ராஜேஷ் அகர்வால் கூறியதாவது:

மேற்காசிய போர் நிலவரம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள 17 முதல் 18 நாடுகளுடன் வர்த்தகத் தொடர்பு கொண்டுள்ள ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கில் இந்த 'ரிலீஃப்' திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கியமாக, ஐக்கிய அரபு அமீரகம், சவூதி அரேபியா, குவைத், கத்தார், ஓமன், பஹ்ரைன், இராக், ஈரான், இஸ்ரேல், ஏமன் போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படும் சரக்குகளுக்கே இத் திட்டத்தில் பிரதான முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இத் திட்டம் மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்டுள்ளது. குறிப்பாக, மார்ச் 1 முதல் வரும் மே 31-ஆம் தேதி வரை காலாவதியாகும் சரக்குகள் ஏற்றுமதிக்கான முன்கூட்டிய அனுமதி, எந்தவித (காம்போசிசன் கட்டணம்) அபராதமும் இன்றி வரும் ஆகஸ்ட் 31-ஆம் தேதி வரை தானாக நீட்டிக்கப்படும். ஏற்கெனவே காப்பீடு செய்யப்பட்ட கடந்த பிப்ரவரி 14 முதல் மார்ச் 15-ஆம் தேதி வரையிலான சரக்குகளுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்.

அடுத்ததாக, மார்ச் 16 முதல் ஜூன் 15-ஆம் தேதி வரையிலான 3 மாத காலத்துக்கு ஏற்றுமதிக்காக வரவிருக்கும் சரக்குகளுக்கு 'இசிஜிசி' காப்பீட்டை ஊக்குவிப்பதையும், எளிதாக்குவதையும் இத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

மூன்றாவதாக, குறு-சிறு-நடுத்தர நிறுவனங்களுக்கு கூடுதல் கட்டண சுமைகளிலிருந்து நிவாரணம் அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக, பிப்ரவரி 14 முதல் மார்ச் 15 வரையிலான ஒரு மாத காலத்துக்கு அசாதாரண சரக்கு கட்டணம் மற்றும் காப்பீட்டு செலவுகள் பகுதியளவு திரும்ப அளிக்கப்படும்.

'இசிஜிசி' காப்பீடு எடுக்காத குறு-சிறு-நடுத்தர நிறுவன ஏற்றுமதியாளர்களுக்கும் இது பொருந்தும் என்றார்.

பல்வேறு துறை சார்ந்த குழு: மேற்காசிய நிலவரம் மற்றும் சரக்கு கப்பல்களின் போக்குவரத்தை தொடர்ந்து கண்காணித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள, வர்த்தக அமைச்சகம், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், வெளியுறவு அமைச்சகம், ரிசர்வ் வங்கி, மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியம் உள்ளிட்ட பல்வேறு துறைகளை உள்ளடக்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

# உலகின் மகிழ்ச்சிகர நாடுகள்: இந்தியாவுக்கு 116-ஆவது இடம்

## பின்லாந்து தொடர்ந்து முதலிடம்

லண்டன், மார்ச் 19: உலகின் மகிழ்ச்சிகரமான நாடுகளின் பட்டியலில் இந்தியா 116-ஆவது இடத்தை பிடித்துள்ளது. கடந்த ஆண்டு 118-ஆவது இடத்தில் இருந்த இந்தியா இப்போது 116-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இந்த தரவரிசையின்படி, தனது அண்டை நாடுகளை விட இந்தியா பின்தங்கியுள்ளது.

சர்வதேச மகிழ்ச்சி தினம் வெள்ளிக்கிழமை (மார்ச் 20) கொண்டாடப்படுவதை முன்னிட்டு, நிகழாண்டுக்கான மகிழ்ச்சிகரமான நாடுகளின் பட்டியல் வியாழக்கிழமை வெளியிடப்பட்டது.

அமெரிக்காவின் கேலப் ஆய்வு நிறுவனம் மற்றும் ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி தீர்வுகள் அமைப்புடன் இணைந்து பிரிட்டனின் ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்கழக நல்வாழ்வு ஆய்வு மையம் இந்தப் பட்டியலை வெளியிட்டுள்ளது.

**முதலிடத்தில் பின்லாந்து:** தனிநபர் சராசரி உற்பத்தி, சுதந்திரம், நன்கொடைகள், ஆரோக்கியமான ஆயுட்காலம், ஊழலற்ற நிர்வாகம் என பல்வேறு காரணிகளின் அடிப்படையில் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட இந்த தரவரிசை பட்டியலில் தொடர்ந்து 9-ஆவது ஆண்டாக முதலிடத்தை தக்கவைத்துள்ளது பின்லாந்து.

2 முதல் 10 வரையிலான இடங்களில் ஐஸ்லாந்து, டென்மார்க், கோஸ்டா ரிகா, ஸ்வீடன், நார்வே, நெதர்லாந்து, இஸ்ரேல், லக்ஸம்பெர்க், ஸ்விட்சர்லாந்து ஆகிய நாடுகள் உள்ளன. அமெரிக்கா 23-ஆவது இடத்தில் உள்ளது.

இந்தப் பட்டியலில் இந்தியா 116-ஆவது இடத்தில் உள்ளது.

கடந்த ஆண்டு 118-ஆவது இடத்திலும், 2024-இல் 126-ஆவது இடத்திலும் இந்தியா இருந்தது.

**'இந்தியர்கள் நம்பிக்கை மிக்கவர்கள்':** உலகின் மகிழ்ச்சிகரமான நாடாக பின்லாந்து நீடிப்பது குறித்து இந்தியாவுக்கான அந்நாட்டின் தூதர் கிம்மோ லாடேவிர்டா கூறுகையில், 'நீண்ட கால வளர்ச்சி மற்றும் சமூக நம்பிக்கையால் உலகின் மகிழ்ச்சி குறியீட்டில் பின்லாந்து தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது.

பின்லாந்து மகிழ்ச்சியான நாடு என்றால், இந்தியர்கள் உலகிலேயே நம்பிக்கைமிக்க மக்கள்.

இந்தியர்களின் நம்பிக்கையும், பின்லாந்து நாட்டவரின் மகிழ்ச்சியும் பல்வேறு வழிகளில் வெற்றிகமாக ஒன்றிணைய முடியும்' என்றார்.

**உலகின் மகிழ்ச்சியற்ற நாடு ஆப்கன்:** நமது அண்டை நாடான ஆப்கானிஸ்தான், உலகின் மகிழ்ச்சியற்ற நாடு என்ற முத்திரையுடன் பட்டியலில் தொடர்ந்து கடைசி இடத்தில் (147) உள்ளது.

| அண்டை நாடுகள் | 2026 | 2025 | 2024 |
|---|---|---|---|
| சீனா | 65 | 68 | 60 |
| நேபாளம் | 99 | 92 | 93 |
| பாகிஸ்தான் | 104 | 109 | 108 |
| வங்கதேசம் | 127 | 127 | 129 |
| இலங்கை | 134 | 134 | 128 |
| இந்தியா | 116 | 118 | 126 |

# யுகாதி, குடி பட்வா, சைத்ர நவராத்திரி விழாக்கள் கொண்டாட்டம்

## மக்களுக்கு பிரதமர் மோடி வாழ்த்து

**புது தில்லி, மார்ச் 19:** தெலுங்கு-கன்னட புத்தாண்டு தினமான யுகாதி பண்டிகை, மராத்திய புத்தாண்டைக் குறிக்கும் குடி பட்வா, ஹிந்து புத்தாண்டு தினமான நவ் சம்வத்சர், சைத்ர நவராத்திரி தொடக்கம் உள்ளிட்ட விழாக்களையொட்டி, நாட்டுமக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வியாழக்கிழமை வாழ்த்து தெரிவித்தார்.

தெலுங்கு - கன்னட புத்தாண்டைக் குறிக்கும் யுகாதி பண்டிகை வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது. இதையொட்டி, ஆந்திரம், தெலங்கானா, கர்நாடகம் மற்றும் பிற மாநிலங்களில் வாழும் தெலுங்கு, கன்னட மொழி பேசும் மக்கள், பாரம்பரிய முறைப்படி கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். மாவிலைத் தோரணங்கள், மலர்கள், வண்ணக் கோலங்களால் வீடுகள் அலங்கரிக்கப்பட்டு, விருந்துகள் களைகட்டின.

புத்தாண்டையொட்டி, கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. பக்தர்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்து சுவாமி தரிசனம் மேற்கொண்டனர்.

இதேபோல், ஹிந்து நாள்காட்டியின்படி புத்தாண்டு தினமான நவ் சம்வத்சர் (விக்ரம் சம்வத் 2083), மராத்திய புத்தாண்டான குடி பட்வா, சிந்தி மக்களின் புத்தாண்டைக் குறிக்கும் சேதி சந்த், காஷ்மீரி ஹிந்து புத்தாண்டான நவ்ரே, மணிப்பூர் மைதேயி சமூகத்தினரின் புத்தாண்டு தினமான சாஜிபு சைரவோபா உள்ளிட்ட விழாக்களும் கொண்டாடப்பட்டன. ஹிந்து புத்தாண்டையொட்டி, சைத்ர நவராத்திரி (வசந்த நவராத்திரி) பண்டிகையும் வியாழக்கிழமை தொடங்கியது.



**பிரதமர் மோடி வாழ்த்து:** இவ்விழாக்களையொட்டி, நாட்டு மக்களுக்கு எக்ஸ் வலைதளத்தில் வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடி, சம்பந்தப்பட்ட மாநில மக்களுக்கு பிரத்யேக கடிதங்களையும் எழுதினார்.

யுகாதி பண்டிகையையொட்டி, அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'புத்தாண்டின் தொடக்கத்தைக் குறிக்கும் யுகாதி பண்டிகை, வளமான பாரம்பரியத்தில் வேரூன்றியதாகும். புதிய சக்தி மற்றும் புதிய ஆரம்பங்களின் அடையாளமிது. ஒவ்வொருவரும் தங்களின் லட்சியத்தை அடையவும், சமூகத்துக்கு நேர்மறையாக பங்களிக்கவும் இந்தப் புத்தாண்டு உத்வேகமளிக்கட்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திரம், தெலங்கானா, கர்நாடக மாநில மக்களுக்கு அவர் எழுதிய கடிதத்தில், 'மனித வாழ்க்கையின் ஆழமான அர்த்தத்தை உணர்த்தும் யுகாதி பண்டிகை, சவால்களை துணிவுடன் எதிர்கொள்ளவும், வெற்றியை நன்றியுணர்வுடன் வரவேற்கவும் ஊக்குவிக்கிறது' என்று தெரிவித்துள்ளார்.

**'கூட்டு முயற்சிகளுக்குப் புதிய உத்வேகம்':** ஹிந்து புத்தாண்டையொட்டி, அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'வரும் புத்தாண்டு ஒவ்வொருவரின் வாழ்விலும் துணிவு, தன்னம்பிக்கை, சேவை உணர்வை நிறையச் செய்யட்டும். தேச கட்டமைப்பில் நமது கூட்டு முயற்சிகளுக்கு புதிய உத்வேகம் கிடைக்கட்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

சைத்ர நவராத்திரி தொடக்கத்தையொட்டி, உத்தர பிரதேசம், உத்தரகண்ட், மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், பிகார், ஜார்க்கண்ட், ஹிமாசல பிரதேசம், தில்லி மக்களுக்கு பிரதமர் கடிதம் எழுதியுள்ளார்.

'சக்தி தேவியின் ஒன்பது விதமான வடிவங்களை வழிபடும் இந்த நவராத்திரி பண்டிகை, தெய்வீகத்தை பல்வேறு வடிவங்களில் மக்கள் உணர உதவும் 'ஏகோஹம் பஹுஸ்யாம்' என்ற உபநிடத தத்துவத்தைப் பிரதிபலிக்கிறது. இந்த தொலைநோக்குப் பார்வையே, இந்தியாவை ஜனநாயகத்தின் தாயாக நிலைநிறுத்தி, பன்முகத்தன்மையை நமது இயல்பான நெறிமுறையாக்கியுள்ளது. இந்த ஒன்பது நாள்களிலும் குடிமக்கள் அனைவரின் நல்வாழ்வுக்காக ஆதி சக்தியைப் பிரார்த்திக்கிறேன்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.